



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 273 | 27.03.2026 | FRIDAY | PANGUNI: 13 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 273 | 27.03.2026 | வெள்ளிக்கிழமை | பங்குனி : 13 | விலை : ரூ.5/-


## ஏப்ரல் 2ம்தேதி முதல் பிரசாரத்தை தொடங்குகிறார் மு.க.ஸ்டாலின்

# "பரபரப்பாகும் தேர்தல்களம் !"

சென்னை, மார்ச்.27-

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் 23ந் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, அதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 30ந் தேதி தொடங்க இருக்கிறது. சட்டசபை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற்று, அதே நாளில் தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க., அ.தி.மு.க., நா.த.க. த.வெ.க. உள்பட அனைத்து கட்சிகளும் தங்களுடைய தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றனர். குறிப்பாக கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதி பங்கீடு விவகாரம், தேர்தல் பிரச்சாரம், தேர்தல் வாக்குறுதிகள் உள்ளிட்டவற்றில் அனைத்து கட்சிகளும் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன.

இதனிடையே



தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், தேமுதிக, மதிமுக, விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டு உள்பட பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன. கூட்டணியில் உள்ள பெரும்பாலான கட்சிகளுக்கு தொகுதி பங்கீடு நிறைவடைந்துள்ளது.

அதன்படி திமுக 165*, காங்கிரஸ் 28, தே.மு.தி.க. 10, விடுதலை சிறுத்தைகள் கட்சி 8, இந்திய கம்யூனிஸ்டு கட்சி 5, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி 5, ம.தி.மு.க. 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 2, மனிதநேய மக்கள் கட்சி 2, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி 2, மனிதநேய ஜனநாயக கட்சி 1, எஸ்.டி.பி.ஐ. 1, முக்குலத்தோர் புலிப்படை 1 என தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் தி.மு.க. எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது.. கூட்டணி கட்சிகளுக்கு எந்த தொகுதிகளை கொடுப்பது என்ற பட்டியல் இன்றைக்குள் முடிவு செய்யப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் தி.மு.க. வேட்பாளர் பட்டியல் மற்றும் தேர்தல் அறிக்கைகளை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிடுவார் என்று கூறப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுவதும் சென்று பிரசாரம் செய்ய இருக்கிறார்.

இதன்படி திருவாரூரில் ஏப்ரல் 2ம் தேதி தேர்தல் பிரசாரத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்க உள்ளார். மாநிலம் முழுவதும் பயணம் மேற்கொள்ளும் அவர், ஏப்ரல் 21ம் தேதி கொளத்தூரில் தனது பிரசாரத்தை நிறைவு செய்கிறார்.

## வேட்பாளர் வரலாறு: தொண்டாமுத்தூரில் 4வது முறையாக களமிறங்கும் எஸ்.பி.வேலுமணி

கோவை: மார்ச்.27-

கோவை தொண்டாமுத்தூர் தொகுதியின் அதிமுக வேட்பாளராக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி அறிவிக்கப்பட்டுள்ளார். இவர், தொடர்ந்து 4வது முறையாக இத்தொகுதியில் களமிறங்குகிறார்.



அதிமுக சார்பில் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் முதல் கட்ட வேட்பாளர்கள் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. அதில், தொண்டாமுத்தூர் தொகுதியில் முன்னாள் அமைச்சரும், கோவை புறநகர் தெற்கு மாவட்ட செயலாளரும், தலைமை நிலைய செயலாளருமான எஸ்.பி.வேலுமணி எம்.எல்.ஏ. போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006 11 காலகட்டத்தில் பேரூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எஸ்.பி.வேலுமணி, கடந்த 2011ல் தொண்டாமுத்தூர் தொகுதியில் முதல் முறையாக போட்டியிட்டார். 2016ல் இரண்டாவது முறையாகவும், 2021ல் 3வது முறையாகவும் இத்தொகுதியில் போட்டியிட்டு வென்ற அவர், நடப்புத் தேர்தலில் 4வது முறையாக போட்டியிடுகிறார்.

குனியமுத்தூர் சுகுணாபுரத்தைச் சேர்ந்த எஸ்.பி.வேலுமணி, இளமைக்காலம் முதலே அதிமுகவில் உறுப்பினராக இருந்து பணியாற்றி வருகிறார். 2001ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு குனியமுத்தூர் நகராட்சி தலைவர் ஆனார்.

2006ம் ஆண்டு முதல் முறையாக பேரூர் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட்டு தன்னை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளரை விட 14,235 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த காலகட்டத்தில் திமுக ஆளும் கட்சியாக இருந்ததால், திமுக அரசுக்கு எதிராக மறைந்த அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா அறிவித்த அத்தனை போராட்டங்களையும் முன்னின்று எஸ்.பி.வேலுமணி நடத்தினார்.

பின்னர், 2011, 2016 தேர்தல்களில் தொண்டாமுத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வென்ற எஸ்.பி.வேலுமணி அமைச்சராக பணியாற்றியுள்ளார். சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, தொழில்துறை, வருவாய்த்துறை, சட்டத்துறை, உள்ளாட்சித்துறை ஆகிய துறைகளின் அமைச்சராக பணியாற்றியுள்ளார்.

அதிமுகவில் தற்போதைய நிலையில் தவிர்க்க முடியாத தலைவராக உள்ள எஸ்.பி.வேலுமணி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களை உள்ளடக்கிய கொங்கு மண்டலத்தின் பொறுப்பாளராகவும் உள்ளார்.எஸ்.பி.வேலுமணி

## பெண்கள் குறித்த பொன்ராஜ் கருத்துக்கு விஜய் கண்டனம் திமுக மீதும் காட்டமான விமர்சனம்

சென்னை: மார்ச்.27-

தவெக ஆதரவுப் பெண்கள் குறித்த அரசியல் விமர்சகர் பொன்ராஜின் கருத்து அக்கட்சியின் தலைவர் விஜய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும், இந்த விவகாரத்தில் திமுகவையும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.



இது குறித்து அவர் இன்று வெளியிட்ட எக்ஸ் தளப் பதிவில், "இந்த மண்ணின் பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரிய என் அம்மா, அக்கா, தங்கைகளைத் தரக்குறைவான, சொல்லொணா வார்த்தையால் திமுகவின் ஆதரவாளராகச் செயல்பட்டு வரும் கைக்கூலி ஒருவர் வாய்க்கு வந்தபடி விமர்சித்திருக்கிறார். திமுக தலைமையின் அரவணைப்பிலும் ஆதரவிலும் செயல்படும் இத்தகைய ஆதாய சூதாடிகளுக்குத் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்ற நபர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத திமுக அரசையும் வன்மையாகக் கண்டிக்கிறேன். தவெகவைச் சீண்டுவதாக நினைத்து, ஒட்டுமொத்தப் பெண்களையும் அவமதிக்கும் இச்செயலால், வருகின்ற தேர்தலில் தாய்க்குலத்தின் ஏகோபித்த முடிவால் தீய சக்தி திமுக மண்ணைக் கவ்வப் போவது உறுதி உறுதி உறுதி" என்று விஜய் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனா தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "நமது தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த பெண்களை விமர்சிக்கிறேன் என்ற பெயரில், பெருமதிப்பிற்குரிய தமிழ்நாட்டின் பெண்களை வக்கிரமான வார்த்தைகளில் இழிவுபடுத்தியுள்ள பொன்ராஜின் கருத்து வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

மாபெரும் மனிதர்களிடம், சிறந்த பொறுப்பில் வேலை செய்தவர் என்றெல்லாம் சொன்னாலும், பின்னாளில் திமுக ஆதரவாளராக மாறிய பிறகு அடிப்படை அறமும், தேவையான மனித மாண்பும் துளியும் அற்றவராகவே பொன்ராஜ் செயல்பட்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. எந்தவொரு சாமானிய மனிதனும் சொல்லக் கூசும் வார்த்தைகளை, ஊடகத்திற்கு முன் உட்கார்ந்துகொண்டு ஒருவர் இதுபோல் பேசுகிறார் என்றால் திமுக அதிகார பின்புலம் இல்லாமலா என்ற சந்தேகம் எழுகிறது?

இதுபோன்ற அருவருக்கத்தக்க வகையில் திமுகவுக்கு ஆதரவாகப் பேசும் நபர்களைத் தனது அமைதியின் மூலம் திமுக தலைவர் ஸ்டாலின் ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாரா?

கண்ணியத்துக்குரிய தமிழ்நாட்டின் பெண்களுக்கு எதிரான வன்முறை கருத்துகளைத் தெரிவித்து பதற்றமான சூழலைத் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கும் பொன்ராஜ் மீது தேர்தல் ஆணையமும், காவல் துறையும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அநாகரிக அரசியலின் உச்சமாக தமிழக பெண்கள் மீது மோசமான வன்மத்தை வெளிப்படுத்தியுள்ள கருத்து எந்த நிலையிலும் ஏற்கக் கூடியதல்ல. தான் பேசிய கருத்துக்கு பொன்ராஜ், உடனடியாக தமிழக பெண்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையெனில், பெண்கள் மீது மோசமான பார்வை கொண்டவர்களுக்கு தங்கள் ஜனநாயக போராட்டத்தின் மூலம் தக்க பாடம் புகட்டுவார்கள் தமிழக மகளிர்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாட்டில் ஏழு முனைப்போட்டியா?..

சென்னை, மார்ச்.27-

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் கடந்த முறை ஐந்து முனைப் போட்டி நிலவிய நிலையில், தற்போது ஏழு முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது. வருகின்ற திங்கள்கிழமை (மார்ச் 30) முதல் வேட்புமனுத் தாக்கல் தொடங்கவுள்ளன.

கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி, அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, அமமுக தலைமையிலான கூட்டணி, மக்கள் நீதி மய்யம் தலைமையிலான கூட்டணி மற்றும் நாம் தமிழர் கட்சி என ஐந்து முனைப் போட்டி ஏற்பட்டது.

இவற்றில், திமுக மற்றும் அதிமுக தலைமையிலான கூட்டணியைத் தவிர மற்ற மூவரும் ஒரு இடங்களில்கூட வெற்றி பெறவில்லை.

மேலும், திமுக கூட்டணி 45.38%, அதிமுக கூட்டணி 39.71%, நாம் தமிழர் கட்சி 6.58%, அமமுக கூட்டணி 2.85%, மநீம கூட்டணி 2.73% வாக்குகள் பெற்றன.



பிற கூட்டணியின் ஆதரவின்றி தனிப் பெரும்பான்மையுடன் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆட்சி அமைத்தது.

இந்த நிலையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக, அதிமுக கூட்டணியில் இடம்பெறப் போகும் கட்சிகள் என்னென்ன?, தவெக ஏதேனும் கூட்டணியில் இணையுமா? அல்லது புதிய கூட்டணியை உருவாக்குமா?, தேமுதிக, அமமுக எந்தக் கூட்டணியில் சேரப் போகிறது? என அடுக்கடுக்கான கேள்விகள் இருந்தன.

இந்த நிலையில், திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் தொடர்கின்றன. புதிய வரவாக தேமுதிக இணைந்துள்ளது.

மறுபுறம் பிரதான எதிர்க்கட்சியான அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக, அன்புமணியின் பாமக, அமமுக உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

இவ்விரு கூட்டணியிலும் தொகுதிப் பங்கீடுகள் நிறைவுபெற்று ஒப்பந்தமும் கையொப்பமாகிவிட்டது.

புதிதாக கட்சித் தொடங்கி முதல்முறையாக தேர்தலை சந்திக்கவிருக்கும் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம், காங்கிரஸுடன் கூட்டணி அமைக்க முயற்சித்த நிலையில், தற்போது தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்துள்ளது.

சீமானின் நாம் தமிழர் கட்சி வழக்கம்போல் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்து களமிறங்கியுள்ளது.

ஒரு வாரம் முன்பு வரை தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் நான்கு முனைப் போட்டியாகவே கருதப்பட்டது. இதனிடையே புதிதாக அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கிய சசிகலா, தைலாபுரம் சென்று ராமதாஸுடன் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதையடுத்து, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல்களை ராமதாஸ் பாமகவும் அபுமமுகவும் இணைந்து சந்திக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 5 முனைப் போட்டியாக மாறியது.

இந்த நிலையில், தென் தமிழ்நாட்டில் தேவேந்திர குல வேளாளர்களின் வாக்கு வங்கியை வைத்திருக்கும் புதிய தமிழகம் கட்சி தனித்துப் போட்டியிடத் தயாராகி வருவதாக அக்கட்சியின் தலைவர் டாக்டர் கே. கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் போட்டியிட்ட புதிய தமிழகம் கட்சிக்கு வெறும் 2 தொகுதிகள் மட்டுமே கொடுக்க முன்வந்ததால் தே.ஜ. கூட்டணியில் இணைய கிருஷ்ணசாமி மறுத்துவிட்டார்.

தென் தமிழ்நாடு முழுவதும் புதிய தமிழகம் சார்பில் போட்டியிட சுமார் 100 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு எட்டப்படாததால் திமுக கூட்டணியில் இருந்து விலகிய வேல்முருகன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைமையில் புதிய கூட்டணி அமைக்கப்படும் என்று வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

திமுக, அதிமுக கூட்டணிகளுக்கு கடும் சவாலாக மாறியிருக்கும் விஜய்யும், 8 சதவிகித வாக்குகளை வைத்துள்ள சீமானும் பலமான போட்டியாளர்களாக களத்தில் உள்ளனர்.

இவர்களுக்கு மத்தியில் போட்டியிடும் தொகுதிகளில் தங்கள் சமூதாயத்தைச் சார்ந்த வாக்குகளைப் பிரித்து திமுக, அதிமுகவின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக ராமதாஸ் சசிகலா, கிருஷ்ணசாமி, வேல்முருகன் மாறுவார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்!

## வேட்பாளர் வரலாறு: கோவில்பட்டியில் 4வது முறையாக களம் காணும் கடம்பூர் ராஜு

கோவில்பட்டி: மார்ச்.27-

கோவில்பட்டி சட்டப்பேரவை தொகுதியில் அதிமுக வேட்பாளராக கடம்பூர் செ.ராஜு 4வது முறையாக களம் காண்கிறார். அதிமுக தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் மற்றும் அமைப்புச் செயலாளரான, முன்னாள் அமைச்சர் கடம்பூர் செ.ராஜு (66), கோவில்பட்டி தொகுதியில் அதிமுக வேட்பாளராக 4வது முறையாக போட்டியிடுகிறார்.

கோவில்பட்டி தொகுதிக்கு உட்பட்ட கடம்பூர் கே.சிதம்பராபுரத்தில் அதிமுக கிளைச் செயலாளராக கட்சியில் பணியை தொடங்கிய கடம்பூர் செ.ராஜூ. மாவட்ட ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர், மாவட்ட ஜெயலலிதா பேரவைச் செயலாளராக இருந்தார். தற்போது, வடக்கு மாவட்ட அதிமுக செயலாளர், அமைப்பு செயலாளர், சட்டப்பேரவை எதிர்க்கட்சி பொருளாளராக இருக்கிறார்.

2011ம் ஆண்டு தன்னை எதிர்த்து போட்டியிட்ட பாமக வேட்பாளர் கோ.ராமச்சந்திரனை 26,480 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். 2016ம் ஆண்டு திமுக வேட்பாளர் அ.சுப்பிரமணியனை விட428 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிபெற்றார். 2021ம் ஆண்டு நடந்த தேர்தலில் அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரனை 12,403 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

தொடர்ந்து 2016ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை தமிழக செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சராக பணியாற்றினார். கோவில்பட்டி சட்டப்பேரவை தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர் பதவி பெற்ற முதல் நபர் இவரே. தற்போதைய தேர்தலிலும் அதிமுக வேட்பாளராக இவரையே கட்சித் தலைமை அறிவித்துள்ளது.



## ‘நான் முதல்வன்’ திட்டத்தால் உயர்ந்த ஏழை மாணவன்; நெகிழ்ச்சியில் அமைச்சர் ஐ.பெரியசாமி

சின்னாளபட்டி மார்ச் 27-

தமிழக அரசின் ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் பயின்று, குடிமைப் பணித் தேர்வில் (IAS) அகில இந்திய அளவில் 213வது இடத்தையும், தமிழக அளவில் 7வது இடத்தையும் பிடித்துச் சாதனை படைத்துள்ளார் சின்னாளபட்டியைச் சேர்ந்த அருண்பாண்டியன்.

அமைச்சருடன் சந்திப்பு:

இந்தச் சாதனை மாணவர், தனது தந்தை நடராஜன் மற்றும் தாயார் தமிழ்ச்செல்வியுடன் சென்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களைச் சந்தித்துச் சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். அப்போது பேசிய அமைச்சர், “திராவிட மாடல் ஆட்சியின் ‘நான் முதல்வன்’ திட்டம் இன்று கிராமப்புற ஏழை மாணவர்களையும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் போன்ற உயரிய பதவிகளுக்குக் கொண்டு வந்துள்ளது” எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 498 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்தவர். அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்களால் ரூ.15,000 ஊக்கத்தொகை வழங்கி பாராட்டப்பட்டவர். சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பை முடித்த பின், அரசு வழங்கிய குடிமைப் பணிப் பயிற்சி மையத்தில் பயின்றார். தேர்வுக்குத் தயாராகும் போது தமிழக அரசு வழங்கிய மாதம் ரூ.25,000 ஊக்கத்தொகை பெரும் உதவியாக இருந்ததாக அருண்பாண்டியன் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

நிகழ்வின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திமுக நிர்வாகி அம்பை ரவி, ஸ்ரீராம அழகர் தேவஸ்தான கமிட்டி தலைவர் எஸ்.வி.சண்முகம், திருப்பரங்குன்றம் முன்னாள் நகர செயலாளர் தங்கம்;பவுன்ராஜ், ஒன்றிய பெருந்தலைவர் சின்னத்தாய் குமாரலிங்கம், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், 8வது வார்டு செயலாளர் மார்க்கெட் சக்திவேல், டிரைவர் முத்துவேல் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## “தாம்பூலப் பையிலும் தேர்தல் செய்தி!” திருமண விழாவில் சமூகப் பொறுப்புணர்வுடன் தேர்தல் விழிப்புணர்வு அசத்திய மணமக்கள்

திசையன்விளை மார்ச். 27-

திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில் நடைபெற்ற ஒரு திருமண வரவேற்பு விழா, வழக்கமான கொண்டாட்டங்களைத் தாண்டி, சமூகப் பொறுப்புணர்வுடன் தேர்தல் விழிப்புணர்வு மையமாக மாறி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.*நிகழ்வின் விபரங்கள்:*

திசையன்விளையைச் சேர்ந்த ராஜகோபால் சாரதா தம்பதியரின் மகன் தாமரைச்செல்வன் மற்றும் பனைவிளையைச் சேர்ந்த செல்வ பிரியா ஆகியோரின் திருமண வரவேற்பு விழா நேற்று தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் வைக்கப்பட்டிருந்த பத்திற்கும் மேற்பட்ட வரவேற்பு பேனர்களில் மணமக்களின் படங்களுடன் பின்வரும் விழிப்புணர்வு வாசகங்கள் இடம்பெற்றிருந்தன:

*"வாக்குரிமை நமது கடமை 100% வாக்களிப்போம்!"*

*"தேர்தல் நாள்: ஏப்ரல் 23"*




*"பணத்திற்கு வாக்கு என்பதை வேரறுப்போம் நேர்மையாக வாக்களிப்போம்!"*

*நூதனப் பிரச்சாரம்:*

மண்டபத்தில் வைக்கப்பட்ட பேனர்கள் மட்டுமன்றி, விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் வழங்கப்பட்ட தாம்பூலப் பைகளிலும் இதே விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிடப்பட்டிருந்தன. இந்த வித்தியாசமான முயற்சியைக் கண்டு வியந்த உறவினர்களும் பொதுமக்களும் மணமக்களின் சமூக ஆர்வத்தைப் பாராட்டிச் சென்றனர். தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், திசையன்விளையில் நடந்த இந்த நூதனப் பிரச்சாரம் அந்தப் பகுதி முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது."இல்லறம் தொடங்கும் இடத்தில் அறம் காப்போம்!" புதுவாழ்வைத் தொடங்கும் போதே தேசத்தின் கடமையை நினைவூட்டிய மணமக்களுக்கு 'சக்கர வியூகம்' புலனாய்வு நாளிதழ் குழுமம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.



## “வாக்குரிமை நமது கடமை!” மண்டல துணை வட்டாட்சியர் தலைமையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்

சின்னாளபட்டி மார்ச், 27-

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மண்டல துணை வட்டாட்சியர் சௌந்திரபாண்டியன் தலைமையில், கிராம நிர்வாக அலுவலர் சுமதி மற்றும் தன்னார்வலர்கள் ஒன்றிணைந்து ஆத்தூர் தொகுதியின் முக்கியப் பகுதிகளான ஏ.டி.எம் மையங்கள், பெட்ரோல் பங்குகள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் "வாக்களிப்பது நமது கடமை" என்ற வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை ஒட்டினர்.

மேலும், பொதுமக்களுக்குத் துண்டுப் பிரசுரங்களை வழங்கி, ஜனநாயகக் கடமையின் அவசியத்தை வலியுறுத்தினர். முன்னதாக இதற்காக விழிப்புணர்வுப் பேரணிகளும் நடத்தப்பட்டு, தொகுதி முழுவதும் தேர்தல் காய்ச்சல் இப்போதே களைகட்டத் தொடங்கியுள்ளது.




■ புதுச்சேரி மாநிலம் நெல்லித்தோப்பு தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட வேட்பு மனு அளித்திருந்த ஆனந்த்பாபு, தனது வேட்பு மனுவை வாபஸ் பெற்றார். நெல்லித்தோப்பு தொகுதியில் கூட்டணி கட்சியான திமுக சார்பில் கார்த்திகேயன் போட்டியிடுகிறார் .




■ *திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் FST 1B பறக்கும் படை குழுவினரால் மாட்டுப் பாதை அருகில் எவ்வித ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.93,000 பணத்தை கைப்பற்றி, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைத்தனர்




■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ராஜபாளையம் மெயின் ரோடு ஸ்ரீ சொர்ண விநாயகர் அருளால் ஸ்ரீ சுடலை முத்து சுவாமிகள் நினைவு அறக்கட்டளை சத்குரு சுடலைமுத்து சுவாமிகள் 93 ஆம் ஆண்டு குருபூஜை விழா காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை அன்னதானம் ஏராளமான பக்த கோடிகள் கலந்து கொண்டு குருபூஜை விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.




■ சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு, இரு மாநில சோதனைச் சாவடிகளில் கண்காணிப்புப் பணியினை தீவிரப்படுத்துவது தொடர்பாக காவல்துறை, வனத்துறை, கலால் (ம) ஆயத்தீர்வைத்துறை ஆகிய அலுவலர்களுடன் தென்காசி மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்., கொல்லம் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் என்.தேவிதாஸ், ஆகியோர் தலைமையில் காணொளிக் காட்சி வாயிலாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.



■ திருநெல்வேலியில் மாவீரன் கராத்தே செல்வின் நாடாரின் 29 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, அவரது சமாதியில் நாடார் விழிப்புணர்வு பேரவை சார்பில், மாநில தலைவர் சிங்கை முருகன் மற்றும் மாநிலச் செயலாளர் ஜெனிஸ் ஆகியோர் தலைமையில் பலர் கலந்துகொண்டு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.




■ எதிர் வரும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், வெளிப்புற சிகிச்சைப் பிரிவில் மருத்துவம் பெற வருபவர்களிடம்வழங்கப்படும் மருத்துவச் சீட்டில், வாக்காளர் விழிப்புணர்வு செய்திகள் அச்சிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 100% சதவிகித வாக்குப்பதிவு மற்றும் கண்ணியமான வாக்குப்பதிவு" பற்றிய கருத்துக்கள் அடங்கிய வெளிப்புற நோயாளி மருத்துவச் சீட்டினை, மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கன் வெளியிட்டார். வெளியீட்டு விழாவில் இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் உதயசங்கர், துணை மாவட்ட தேர்தல் அதிகாரி கண்ணபிரான் ஆகியோர் உடன் இருந்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., திருப்பூர் மாநகராட்சி, தியாகி திருப்பூர் குமரன் பேருந்து நிலையம் அருகில் உள்ள உழவர் சந்தையில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து காய்கறிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதை பார்வையிட்டு வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, இணை இயக்குநர் (வேளாண்மை) எம்.ஆதிசாமி, துணை இயக்குநர் (வேளாண் விற்பனை வணிகம்) எஸ்.சண்முகசுந்தரம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதிஸ்குமார், வேளாண் விற்பனை சங்க செயலாளர் எஸ்.வெங்கடாசலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பி.மீனாம்பிகை ஆகியோர் உள்ளனர்.




■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, சேலம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி சேலம் மாவட்டத்திற்கான சிறப்பு இலச்சினை (Logo) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி வெளியிட்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வாணிஈஸ்வரி, உதவி ஆட்சியர் (பயிற்சி) விவேக்யாதவ், இ.ஆ.ப., உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.




## தொல்லியல் குறியீடுகளைத் தொகுத்து இணையதளத்தை வெளியிட்டது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை, மார்ச்.,27-

தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கபட்ட தொல்லியல் குறியீடுகளைத் தொகுத்து tngraffiti.in என்ற இணையதளத்தை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்டது. தொல்லியல் ஆய்வு நடந்த இடங்கள், அதில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்கள் (மற்றும் குறியீடுகள் ஆகியற்றை தரவுகளாக தொகுத்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளன



■ *189 தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வட்டாட்சியர்* இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. இந்திய தேர்தல் ஆணையம் சுதந்திரமான நியாயமான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்து விடவும் தேர்தல் பிரச்சாரத்தின் போது சமமான, ஆரோக்கியமான போட்டியிடும் சூழலை அனைத்து வேட்பாளர்களுக்கிடையே உருவாக்கி டவும் பணம் /பொருள் மூலமாக வாக்காளர்களுக்கி தேவையற்ற செல்வாக்கினை செலுத்துவதை தடுத்திடவும் பல்வேறு அறிவுரைகள் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.




■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் ரு 2026 முன்னிட்டு அம்மாப்பேட்டை மண்டல அலுவலகத்தில் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி மனித சங்கிலி மற்றும் உறுதிமொழி நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திட்ட அலுவலர் மற்றும் மகளிர் திட்ட அலுவலர் வாணிஈஸ்வரி, மாவட்ட செயல் அலுவலர் மா.ஜெய்கணேஷ், அம்மாப்பேட்டை உதவி ஆணையாளர் மு.அம்சவேணி மற்றும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், பகுதி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் மதுரை மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு, மண்டல அலுவலர்களுக்கான தேர்தல் பணிகள் குறித்த பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், தலைமையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலை1, நிலை2, நிலை3 அலுவலர்கள் ஆகியோருக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் (Randomization) சட்டமன்ற தொகுதி வாரியாக பணி ஒதுக்கீடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.



■ மதுரை அண்ணாநகர் உழவர் சந்தையில் பொதுமக்களிடையே தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மலர்கள் மற்றும் காய்கறிகளை கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# “ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸுக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு!” சீமான் விமர்சனம்

மேட்டூர், மார்ச்.,27-

“ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸ் கட்சிக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு கொடுத்து கூடவே வைத்திருக்கிறர்கள்,” என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் திமுகவை விமர்சித்துள்ளார்.

சேலம் மாவட்டம் மேட்டூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட மேச்சேரி பேருந்து நிலையம் முன்பு இன்று நடந்த பிரச்சாரத்தில் நாதகவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மேட்டூர் வேட்பாளர் வித்யா வீரப்பனை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்.



அப்போது அவர் பேசியதாவது: ஒரு சொட்டு தண்ணீர் கொடுக்க முடியாது என்று கர்நாடக முதல்வர் சொல்கிறார். நமது முதல்வர் கர்நாடகா காங்கிரஸ் வெற்றிக்காக பிரச்சாரம் செய்தார். கட்சித் தலைவராக போய்க் கேட்பது தவறில்லை, ஆனால், முதல்வர் என்ற பெயரில் போய்க் கேட்பது எந்த விதத்தில் நியாயம்? ஒரு சொட்டு தண்ணீர் தராத காங்கிரஸ் கட்சிக்கு 28 எம்எல்ஏ சீட்டு, ஒரு ராஜ்யசபா சீட்டு கொடுத்து கூடவே வைத்திருக்கிறர்கள்.

கச்சத்தீவு, காவிரி நீர் உரிமை, முல்லை பெரியாறு உரிமை என அனைத்தையும் இழந்து நிற்கிறோம். காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு வழக்கை கருணாநிதி திரும்பப் பெற்றார். இதனால் 500 டிஎம்சி பெற வேண்டிய நாம் 150 டி.எம்சி.க்காக கையேந்தி நிற்கிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தண்ணீர் தேவையில் தன்னிறைவு திட்டம் கொண்டுவந்து கடலில் கலக்கிறதை தடுத்து நிறுத்தி ஏரிகள், குளங்களை நிரம்பி அடுத்தவரிடத்தில் கையேந்தி நிற்கிற நிலைமையை மாற்றுவோம்.

ஒரு விழுக்காடு, அரை விழுக்காடு வைத்திருக்கிறவர்கள் கூட்டணிக்காக பேரம் பேசி செல்கிற நேரத்தில் தனித்தன்மையாக மக்களை சந்தித்து 8.5 விழுக்காடு வாக்கு வைத்திருக்கிறோம். திமுக அதிமுக தனியாக இதுதான் எங்கள் வாக்குகள் என்று சொல்ல முடியாது. எவ்வளவோ பதவி ஆசை காட்டியபோதும், நாங்கள் பதவி, பணத்திற்காக வந்தவர்கள் அல்ல மக்களின் உதவிக்காகவும், தமிழ் இனத்திற்காகவும் வந்தவர்கள். மாற்றம் என்பது சொல் அல்ல அது செயல்.

நாங்கள் வந்தால் மிக்சி, கிரைண்டர் அண்டா, பிரிட்ஜ், டிவி, ரூ 5,000, ரூ 10,000, தருவோம் என்றெல்லாம் சொல்ல மாட்டோம். நீங்கள் அதனை வாங்கிக் கொள்கிற வேலைவாய்ப்பும், வருவாய் பெருக்கத்தையும் ஏற்படுத்தி கொடுப்போம். ஆட்சிக்கு வந்தவுடன் டாஸ்மாக்கை மூடுவேன். பனை பால், தென்னை பால், ஈச்சம்பால், மூலிகைச்சாறு என்று கல்லை திறந்து விடுவேன்.

அதிமுக, திமுக வெல்வது சாதாரண நிகழ்வு தான். அவர்கள் பலமுறை வென்று இருக்கிறார்கள் ஆனால், நாங்கள் வெல்வது சரித்திரத்தில் பதிவிடும் மாபெரும் புரட்சி. வீரப்பன் திருடன் என்றால் ஜெயலலிதா, கருணாநிதிக்கு என்ன பெயர்? விற்றவனை தேடிப் பிடிக்க அலைந்தார்கள். ஆனால், வாங்கியவனை ஏன் தேடவில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

போலீஸாருடன் நாதக நிர்வாகிகள் வாக்குவாதம்: மேச்சேரி பேருந்து நிலையம் முன்பு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வாகன பிரச்சாரம் மேற்கொண்டார். அவரது பிரச்சார வாகனம் மற்றும் ஒளிப்பதிவு மேற்கொள்ள வந்த வாகனம் சாலை நடுவே நிறுத்தியதால் போக்குவரத்துக்கு நெரிசல் ஏற்பட்டது.

அப்போது பாதுகாப்புப் பணியில் இருந்த மேச்சேரி காவல் ஆய்வாளர் மகேந்திரன் தலைமையிலான போலீஸார் வாகனத்தை ஓரமாக நிறுத்துமாறு அறிவுறுத்தினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போலீஸார் உடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர், சீமான் வந்ததால் வாக்குவாதத்தை கைவிட்டு, அவரது பேச்சை கவனிக்க தொடங்கினர்.

# ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்ல இந்தியா உள்ளிட்ட 5 நாடுகளுக்கு ஈரான் அனுமதி

தெஹ்ரான், மார்ச்.,27-

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக நட்பு நாடுகள் என்ற அடிப்படையில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட ஐந்து நாடுகளின் கப்பல்கள் செல்வதற்கு ஈரான் அனுமதி அளித்துள்ளதாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.




ஈரானிய அரசு தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில், ‘‘நாங்கள் நட்பு நாடுகளாகக் கருதும் குறிப்பிட்ட சில நாடுகளின் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்வதற்கு அனுமதி அளித்துள்ளோம். சீனா, ரஷ்யா, இந்தியா, இராக், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் கப்பல்கள் இந்தப் பாதையில் பயணிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஈரானின் எதிரி நாடுகள், இந்த மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நீர்வழிப் பாதை வழியாகச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.

நாங்கள் ஒரு போர்ச் சூழலில் இருக்கிறோம். இந்த பிராந்தியம் ஒரு போர் மண்டலமாகவே இருக்கிறது. எனவே, எங்கள் எதிரி நாடுகள் மற்றும் அவர்களின் கூட்டாளி நாடுகளின் கப்பல்கள் இந்த வழியாகச் செல்ல அனுமதிக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. அதேநேரத்தில், மற்ற நாடுகளுக்கு இந்த நீர்வழிப் பாதை தொடர்ந்து திறந்தே இருக்கும்’’ என தெரிவித்துள்ளார்.

பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவுக்கு இடையே அமைந்துள்ள இந்த ஹார்முஸ் ஜலசந்தி, உலக அளவில் எண்ணெய் மற்றும் திரவ இயற்கை எரிவாயு போக்குவரத்தில் சுமார் 20 சதவீதத்தைக் கொண்டுள்ளது. அந்த வகையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நீர்வழிப் பாதையை ஈரான் தொடர்ந்து முடக்கி உள்ளது. இதனால் உலக அளவில் கவலைகள் அதிகரித்துள்ளன.

அதேநேரத்தில், ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல்கள் தடையின்றி செல்வதை உறுதிச் செய்வதில் இந்தியா தனது ராஜதந்திர முயற்சிகளை தீவிரமாக மேற்கொண்டது. இந்நிலையில், இந்திய கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக தடையின்றி செல்ல ஈரான் அனுமதி அளித்துள்ளது.

இதனிடையே, ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக திறந்துவிடாவிட்டால் ஈரான் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் எச்சரித்துள்ளார். ஹார்முஸ் ஜலசந்தி தொடர்ந்து முடக்கப்படுமானால், பல நாடுகளின் எரிபொருள் மற்றும் உரப் பாதுகாப்புக்கு அது கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று இந்திய அரசு கருதுகிறது

# அனுமதி பெறாமல் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக சென்ற பாகிஸ்தான் கப்பலை திருப்பி அனுப்பிய ஈரான்

டெஹ்ரான், மார்ச்.,27-

அனுமதி பெறாமல் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக பாகிஸ்தான் செல்ல முயன்ற கன்டெய்னர் கப்பலை ஈரான் திருப்பி அனுப்பியுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் இடையிலான போர் 3 வாரங்களைக் கடந்து நடைபெறுகிறது.



இதனால், ஹார்முஸ் ஜலசந்தி வழியாக சரக்குக் கப்பல் செல்ல ஈரான் தடை விதித்துள்ளது. இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தியதால் சில கப்பல்களுக்கு ஈரான் அனுமதி வழங்கியது. இந்நிலையில், அனுமதி பெறாமல் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக பாகிஸ்தான் செல்ல முயன்ற கன்டெய்னர் கப்பலை ஈரான் திருப்பி அனுப்பியுள்ளது.

இதுகுறித்து ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படையின் (ஐஆர்ஜிசி) கடற்படைத் தளபதி அலிரேசா தாங்சிரி கூறும்போது, "சட்ட நெறிமுறைகளுக்கு இணங்கத் தவறியதாலும், ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்ல அனுமதி பெறாததாலும், பாகிஸ்தான் நோக்கி செல்ல முயன்ற செலன் என்ற கன்டெய்னர் கப்பலை கடற்படை வீரர்கள் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பி உள்ளனர்.

இந்த குறுகிய நீர்வழிப்பாதை வழியாக கப்பல்கள் செல்வதற்கு ஈரானின் கடல்சார் ஆணையத்தின் முழுமையான ஒருங்கிணைப்பு அவசியம். இது நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் நடவடிக்கை" என்றார். உலகளாவிய கச்சா எண்ணெய் விநியோகத்தில் 5ல் ஒரு பங்கு செல்லும் இந்த முக்கிய பாதையில் ஈரான் தனது கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்தியுள்ளது.

"நட்பு நாடுகளின் கப்பல்கள் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு செல்லலாம்" என ஈரான் எச்சரித்துள்ளது. அமெரிக்கா இப்பகுதிக்கு கூடுதல் படைகளை அனுப்பி வரும் வேளையில், பாகிஸ்தான் உள்ளிட்ட இடைத்தரகர்கள் மூலம் 15 அம்ச போர்நிறுத்த திட்டத்தை முன்மொழிந்துள்ளது. இருப்பினும், ஈரான் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகளை நிராகரித்துள்ளது.

# ஈரான் கடற்படைத் தளபதி கொல்லப்பட்டதாக இஸ்ரேல் தகவல்

ஜெருசலேம், மார்ச்.,27-

தாங்கள் நடத்திய ராணுவத் தாக்குதலில், ஈரான் கடற்படைத் தளபதி அலிரெசா டங்சிரி கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

ஈரானின் பந்தர் அப்பாஸ் பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் கடற்படைத் தளபதி அலிரெசா டங்சிரி கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார். அவருடன் சேர்ந்து ஈரானின் மூத்த கடற்படைத் தளபதிகள் பலரும் உயிரிழந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். எனினும், இது குறித்து ஈரான் ராணுவம் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.



இந்நிலையில், இஸ்ரேலுக்கு எதிராக ஈரான் ராணுவமும் ஈரானிய புரட்சிகரப் பாதுகாப்புப் படையும் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. மேற்கு ஆசியப் பிராந்தியம் முழுவதும் பரவியுள்ள இஸ்ரேலிய ராணுவத் தளங்கள் மற்றும் அமெரிக்க தளங்களையும் சொத்துக்களையும் குறிவைத்து ஈரான், ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களைக் கொண்டு 82 அலை தாக்குதல்களை நடத்தி உள்ளன. லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பும், ஈராக்கின் இஸ்லாமிய அமைப்பும் ஈரானுடன் இணைந்து கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

சிபிஎஸ் அறிக்கையின்படி, பென்டகன் தனது 82வது வான்வழிப் பிரிவின் துருப்புகளை மேற்கு ஆசியாவுக்கு அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வான் படையினரோடு, தரைப்படையினரையும் அனுப்ப பென்டகன் திட்டமிட்டுள்ளதாகவும், கார்க் தீவில் தரைவழித் தாக்குதல்களை மேற்கொள்ள அமெரிக்கா பரிசீலித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையே, ஈரானுக்குள் தரைவழி தாக்குதலை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்க வேண்டாம் என்று அமெரிக்க இஸ்ரேலிய படைகளுக்கு ஈரானின் புரட்சிகர பாதுகாப்புப் படை எச்சரிக்கை விடுத்துள்ளது. ‘‘டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோரின் வஞ்சகத்தால் உங்கள் பிள்ளைகளை நரகத்துக்கு அனுப்பாதீர்கள். தரைப்படை ஈரானுக்குள் நுழைய முயன்றால், லட்சக்கணக்கான ஈரான் வீரர்கள் எனும் கடலுக்குள் மூழ்கி மறைந்து போவார்கள்’’ என்று அது எச்சரித்துள்ளது.

முன்னதாக, அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரானுக்கு எதிராக கடந்த பிப்.28ம் தேதி ராணுவ நடவடிக்கையை தொடங்கின. பதிலுக்கு ஈரானும் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க நிலைகளைக் குறிவைத்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இதனிடையே, ஈரானுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதால் அந்நாட்டுக்கு எதிரான தாக்குதலை 5 நாட்களுக்கு நிறுத்துவதாக கடந்த 23ம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார். எனினும், தாங்கள் எந்த பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லை என்றும், அமெரிக்கா தனக்குத் தானே பேச்சுவார்த்தை நடத்திக் கொள்கிறதா என்றும் ஈரான் விமர்சித்திருந்தது. அதேநேரத்தில், ஈரானுக்கு எதிரான தாக்குதல்கள் தொடருவதாக இஸ்ரேல் கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது

# நள்ளிரவில் களம் இறங்கிய கலெக்டர்! கோரிமேடு சோதனைச் சாவடியில் கலெக்டர் அதிரடி ஆய்வு



புதுச்சேரி மார்ச்.,27- 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு புதுச்சேரி மாநிலத்தில் தேர்தல் நன்னடத்தை விதிகள் தீவிரமாக அமல்படுத்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, மாவட்ட தேர்தல் அதிகாரியும் ஆட்சியருமான அ. குலோத்துங்கன், மாநில எல்லைகளில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகளை நள்ளிரவில் நேரில் ஆய்வு செய்து வருகிறார்.

இரவு கோரிமேடு பகுதியில் உள்ள சோதனைச் சாவடிக்குச் சென்ற ஆட்சியர், அங்குள்ள ஆவணங்கள் மற்றும் பணியாளர்களின் வருகையைப் பார்வையிட்டார். சிசிடிவி கேமராக்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த அவர், ஊழியர்களுக்குப் பின்வரும் முக்கிய வழிகாட்டுதல்களை வழங்கினார்:

வாகனச் சோதனையின் போது முறையான பாதுகாப்போடு வீடியோ எடுத்துக்கொண்டு சோதனையில் ஈடுபட வேண்டும்.

கணக்கில் வராத பணம் அல்லது விலையுயர்ந்த பரிசுப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டால், உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். சோதனையின் போது பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் அல்லது தேவையற்ற சிரமமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தேர்தல் ஆணையத்தின் சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு, அரசு ஊழியர்கள் அனைவரும் மிகுந்த கவனமுடன் பணியாற்ற வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.



# மாவீரன் கராத்தே செல்வின் நாடாரின் 29வது ஆண்டு வீரவணக்க நாள்

அகரக்கட்டு மார்ச். 27- மாவீரன் கராத்தே செல்வின் நாடார் அவர்களின் 29வது ஆண்டு வீரவணக்க நாளை முன்னிட்டு, அகரக்கட்டில் உள்ள தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில் சிறப்புக் கருத்தரங்கம் மற்றும் வீரவணக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றிய கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார், கராத்தே செல்வின் நாடாரின் தியாகங்களைப் போற்றிப் பேசினார்: நாடார் சமுதாய மக்கள் ஒன்றிணைய வேண்டும், அவர்களுக்கெனத் தனி அரசியல் அங்கீகாரம் வேண்டும், இன்று உலகம் முழுவதும் நாடார்களின் அடையாளமாகப் பறக்கும் நீலப் பச்சை நிறக் கொடியை 1996 லேயே அறிமுகம் செய்து வைத்தவர் அவரே. சமுதாய முன்னேற்றமே லட்சியமாகக் கொண்டு வீர முழக்கமிட்ட இவரைப் போன்ற ஒரு வலிமையான தலைவர் இன்று வரை எவரும் இல்லை எனப் புகழாரம் சூட்டினார்.

முன்னதாக, கராத்தே செல்வின் நாடார் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் பொருளாளர் சுப்பிரமணியன், பாலசுப்பிரமணியன், தென்காசி மாவட்டத் தலைவர் குருசாமி நாடார், கடையநல்லூர் ஒன்றியத் தலைவர் மணிகண்டன், முருகேஸ் ஜஸ்டின் கிருஷ்ணமூர்த்தி மற்றும் முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



# "புதுச்சேரியில் தேர்தல் ஆணையரின் மெகா டிஜிட்டல் ஆய்வு!"

புதுச்சேரி மார்ச். 27- 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு புதுச்சேரி மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளை ஆய்வு செய்ய, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் துணைத் தேர்தல் ஆணையர் (ஞிணிசி) பானு பிரகாஷ் யெத்தூரு, இ.ஆ.ப. புதுச்சேரிக்கு வருகை தந்தார். புதுச்சேரி ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தில் நடைபெற்ற இந்த ஆய்வின் போது, தேர்தலைச் சீராக நடத்தத் தேர்தல் ஆணையம் கையில் எடுத்துள்ள நவீனத் தொழில்நுட்ப ஆயுதங்களைக் கண்டு அவர் வியப்படைந்தார்.

ஆய்வின் முக்கிய அம்சங்கள்:

துணைத் தேர்தல் ஆணையர் அவர்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் 'முதுகெலும்பாகத்' திகழும் கீழ்க்கண்ட வசதிகளை ஒவ்வொன்றாக ஆய்வு செய்தார். டிஜிட்டல் வேட்டை: புதுவை நகரம் முழுவதும் பொருத்தப்பட்டுள்ள 460 அதிநவீனக் கண்காணிப்புக் கேமராக்கள் மற்றும் 18 எல்லைச் சோதனைச் சாவடிகளின் நேரலைக் காட்சிகளை ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, புதுச்சேரி தலைமைத் தேர்தல் அதிகாரி ஜவகர், இ.ஆ.ப., மாவட்டத் தேர்தல் அதிகாரியும் ஆட்சியருமான அ. குலோத்துங்கன், இ.ஆ.ப. மற்றும் தேர்தல் துறை, காவல்துறை உயர் அதிகாரிகள் உடனிருந்தனர். கட்டுப்பாட்டு அறையின் ஒருங்கிணைப்பு அதிகாரி ), புகார்கள் மீது எடுக்கப்படும் உடனடி நடவடிக்கைகள் மற்றும் டிஜிட்டல் தளங்களின் ஒருங்கிணைப்பு குறித்து விரிவான விளக்கமளித்தார்.

# "திசையன்விளை தந்த தீரன்!" "தமிழ் வழியில் படித்து.. டெல்லியை வென்றவர்!"- ஐபிஎஸ் முதல் டிஜிபி வரை ஒரு வரலாற்றுச் சாதனை



திசையன்விளை மார்ச். 27- நெல்லை மாவட்டம் திசையன்விளையைச் சேர்ந்த சாதாரண ஆசிரியர் குடும்பத்தில் பிறந்த அந்தோனி தேவ்குமார் ஐபிஎஸ், தற்போது உத்தரப் பிரதேச மாநிலத்தின் டிஜிபி ஆகப் பதவி உயர்வு பெற்றுத் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.*சாதனைப் பயணம்:*

திசையன்விளை ஆர்.சி. தொடக்கப்பள்ளி மற்றும் உலக இரட்சகர் மேல்நிலைப்பள்ளியில் தமிழ் வழியில் பயின்ற இவர், சிவில் சர்வீஸ் தேர்வின் முதன்மைத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு என இரண்டையுமே தனது தாய்மொழியான தமிழிலேயே எதிர்கொண்டு வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. 1994ம் ஆண்டு ஐபிஎஸ் அதிகாரியாகப் பணியில் இணைந்த இவர், நேர்மைக்குப் பெயர் போனவர். எஸ்பியாக இருந்தபோதே பத்து முறை பணியிட மாற்றம் செய்யப்பட்டவர் என்பது இவரது உறுதிக்குச் சான்று.*முக்கியப் பொறுப்புகள்:*ஆக்ரா மாவட்ட உளவுத்துறை கண்காணிப்பாளர், அயோத்தி ராமர் கோவில் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட சிறப்புப் பாதுகாப்புப் படையின் முதல் தலைமை அதிகாரி, தற்போது "ரூல்ஸ் அண்ட் மேனுவல்ஸ்" பிரிவின் தலைவராக இருந்த நிலையில், டிஜிபியாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

தமிழக டிஜிபி வெங்கட்ராமன் அவர்களுடன் ஒரே குழுவில் பயிற்சி பெற்றவர் என்பது கூடுதல் தகவல். தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு அந்தோனி தேவ்குமார் ஒரு மாபெரும் முன்னுதாரணம்.



# 24 மணி நேர போராட்டத்திற்கு பிறகு விபத்து ஏற்படுத்தியவர்கள் கைது மறியல் வாபஸ்

தென்காசி மார்ச். 27- புளியங்குடி அருகே உள்ள தனியார் பள்ளி வளாகத்தில் மதுபோதையில் கார் மோதியதில் 4 வயது சிறுமி சிவயாழினி உயிரிழந்த சம்பவம் தமிழகத்தையே உலுக்கியுள்ளது. இச்சம்பவத்தைக் கண்டித்து பொதுமக்கள் நடத்திய 24 மணி நேரப் போராட்டத்தால் தென்காசி மதுரை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

*சம்பவம் என்ன?:*

நெற்கட்டான் செவல் கிராமத்தைச் சேர்ந்த மாரிச்சாமி வேல்மயில் தம்பதியினரின் மகள் சிவயாழினி, கண்ணா மெட்ரிகுலேஷன் பள்ளியில் படித்து வந்தார். கடந்த திங்கட்கிழமை பள்ளி வளாகத்தில் இருந்த சிறுமி மீது, மதுபோதையில் காரை ஓட்டிய ராம்காந்த் என்பவர் பின்னோக்கி மோதியதில் சிறுமி சம்பவ இடத்திலேயே துடித்தது உயிரிழந்தார்.

*பேச்சுவார்த்தை மற்றும் கைது:*

தென்காசி மாவட்ட எஸ்.பி. ஜி.எஸ். மாதவன், ஆய்வாளர்கள் மற்றும் வழக்கறிஞர் குற்றாலம் கே.பி.குமார் பாண்டியன் ஆகியோர் நடத்திய நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பிறகு, விபத்து ஏற்படுத்திய ராம்காந்த் மற்றும் செந்தில் ராஜா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பள்ளி நிர்வாகம் தனது தவறை ஒப்புக்கொண்டு இழப்பீடு வழங்கச் சம்மதித்ததைத் தொடர்ந்து, 24 மணி நேரத்திற்குப் பின் போராட்டம் கைவிடப்பட்டது.

# தபால்கள் வரும்.. ஆனால் பணம் வராது! பணப்பரிவர்த்தனைக்கு மட்டுமே தடை கோவில்பட்டி கோட்ட சுரேஷ் குமார் வேண்டுகோள்

கோவில்பட்டி மார்ச். 27- நிதியாண்டு கணக்கு முடித்தல் மற்றும் தொடர் அரசு விடுமுறைகள் காரணமாக, மார்ச் 31 முதல் ஏப்ரல் 3 வரை அஞ்சலகங்களில் பணப்பரிவர்த்தனை சேவைகள் பாதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 31 (செவ்வாய்): மகாவீர் ஜெயந்தி அஞ்சலகங்களுக்குப் பொது விடுமுறை. ஏப்ரல் 01 - 02 (புதன் - வியாழன்): நிதியாண்டு கணக்கு முடித்தல் மற்றும் புதிய நிதியாண்டு தொடக்கம் காரணமாக, அஞ்சலகங்களில் எந்தவிதமான பணப்பரிவர்த்தனைகளும் நடைபெறாது. இன்டர்நெட் மற்றும் மொபைல் பேங்கிங் சேவைகளும் செயல்படாது. ஏப்ரல் 03 (வெள்ளி): புனித வெள்ளி அஞ்சலகங்களுக்குப் பொது விடுமுறை.

*பொதுமக்களுக்கு வேண்டுகோள்:*

பணத்தேவை உள்ள பொதுமக்கள் முன்கூட்டியே திட்டமிட்டு, இந்த விடுமுறை நாட்களுக்கு முன்னதாகவே பணத்தைச் செலுத்துதல் அல்லது எடுத்தல் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும், பணப்பரிவர்த்தனை இல்லாவிட்டாலும், தபால் புக்கிங் மற்றும் பட்டுவாடா சேவைகள் வழக்கம் போல் நடைபெறும் என கோவில்பட்டி கோட்ட அஞ்சலகக் கண்காணிப்பாளர் சுரேஷ் குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.



■ திண்டுக்கல் மாவட்டம் பொன்மாந்துறை புதுப்பட்டியில் பொதுப்பணித்துறைக்கு கட்டுப்பட்ட தாமரை குளத்தில், விவசாயத்திற்கு என்று சொல்லி கனிமவளக் கொள்ளை தொடர்பாக, அகில இந்திய மருதநாயகம் மக்கள் கட்சியின் மாநில தலைவர் தமீம் அன்சாரி தகவலின் பெயரில், கிராம நிர்வாக அலுவலர் மேற்பார்வையில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

# அனைத்து நாடுகளின் கப்பல்களுக்கும் இனி கட்டணம்

## புதிய மசோதாவை தயாரித்த ஈரான்

ஈரான், மார்ச்.,27-

ஹார்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் அனைத்துக் கப்பல்களுக்கும் கட்டணம் விதிக்க வழிவகுக்கும் வகையில், புதிய சட்ட மசோதாவை ஈரான் அரசு தயாரித்தது. ஈரான் நாடாளுமன்றத்தில் இம்மசோதா விரைவில் இயற்றப்படும் எனவும், ஒரு நாட்டின் வழியாகப் பொருட்கள் கடந்து செல்லும்போது கட்டணம் வசூலிக்கும் நடைமுறை முற்றிலும் இயல்பானதே எனவும் கருத்து தெரிவித்துள்ளது
















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000